பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 02 | செவ்வாய்க்கிழமை | 16.01.2024 | அதிர்வு 168

## கொழும்பில் ஒருவர் சுட்டுப் படுகொலை!

கொழும்பில் நேற்று இரவு ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளியில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் 06



### ஐ.தே.கவின் வேட்பாளரே ரணில்

# மொட்டுவுக்கு இன்னமும் வேட்பாளர் இல்லையாம்

### மஹிந்த ராஜபக்ஷ இப்படிப் பதில்

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நாங்கள் இதுவரை வேட்பாளரைத் தீர்மானிக்கவில்லை. எமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவர் போட்டியிடலாம் அல்லது போட்டியிடாமல் இருக்கலாம்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 06

## தேசிய நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது



### யாழில் நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தேசிய நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரண்டு நாள்கள் விஜயமாக யாழ்ப்பாணம் வந்துள்ள நீதி அமைச்சர் நேற்று 06




தற்போது தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்வே பேசப்படும் முக்கிய விடயமாக இருந்தாலும் இன்று இப் பகுதியில் அதனை ஆராயவில்லை. மாறாக, அரச நிர்வாகப் பக்கம் பார்ப்போம்.

தற்போது வடக்கு, கிழக்கில் நிர்வாக சேவை விசேட தர உத்தியோகத்தர்களிற்கு தட்டுப்பாடு – பற்றாக்குறை – நிலவுகின்றது. அது இந்த ஆண்டில் பெரிய நெருக்கடியாக மாறுவதற்கும் வாய்ப்பு உள்ளது 06



# களுத்துறையில் ஆற்றுமண் அள்ளிய ஐவர் மூன்று படகுகளுடன் சிக்கினர்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுத்துறை பிரதான பாலத்திற்கருகில் ஆற்று மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஐவரை சந்தேகத்தின் பேரில் களுத்துறை குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கைது செய்துள்ளமையுடன் 3 மோட்டார் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர் என்று களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் பாலத்திலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு மிக நீண்டகாலமாக இந்தப் பாரிய மண் அகழ்வு இடம்பெற்றுள்ளது எனவும், இதனால் எதிர்காலத்தில் களுத்துறை பாலத்துக்குப் பாரிய பாதிப்பு ஏற்படலாம் எனவும் களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டீ.சுகதிபாலவின் பணிப்புரையின் பேரில், களுத்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிரசன்ன பிராஹ்மனகே, உதவி பொலிஸ் அதிகாரி துமிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

# வடக்கு ஆளுநர் செயலக பொங்கல் விழாவில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள்!









சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிதிகளுடன் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் பொங்கல் விழா கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது.

வடக்கு மானா ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினரும் பங்கேற்றனர்.

கலாசார நடன நிகழ்வுகளும் பொங்கல் விழாவை முன்னிட்டு நடைபெற்றன.





# யாழில் நல்லிணக்கப் பொங்கல்

## நீதி அமைச்சர் விஜயதாஸ அதீதியாகப் பங்கேற்பு



யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்நிகழவில் பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

வியாவில் வாழ் மக்கள் வர்த்தக சமூகத்துடன் வெளிநாட்டு வாழ் உறவுகளும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தினர்





# வவுனியா பாடசாலை திருட்டுச் சம்பவம்: 8 மணி நேரத்தில் சந்தேகநபர் சிக்கினார்




(கி.வசந்தரூபன்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான தொலைக்காட்சி களவாடப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் முறைப்பாடு செய்து 8 மணி நேரத்துக்குள் கைது செய்துள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் உப பொலிஸ் பரிசோதகர் அகமட் தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான திசாநாயக்க, ஜெயவர்த்தன, திலீப் மற்றும் பொலிஸ் கொஸ்தாபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினரினால் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பாடசாலைக்கு அருகேயுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. காணொளிகளையும் பொலிஸார் பரிசோதனைக்குட்படுத்தினர். இதன்போது கடந்த வெள்ளிக்கிழமை (12) மதியம் 3.29 மணியளவில் ஒருவர் தொலைக்காட்சியைத் தூக்கிச் செல்வது சி.சி.ரி.வியில் பதிவாகியிருந்தது. சி.சி.ரி.வி. காட்சியின் உதவியுடன் தொடர்ச்சியாக



விசாரணைகளை முன்னெடுத்த சமயத்தில் இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் குறித்த தொலைக்காட்சியை விற்பனைக்கு வழங்கியமை தெரியவந்ததையடுத்து, சுமார் 8 மணி நேரத்தில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# யாழ். போதனாவில் பொங்கல் நிகழ்வு

தைப்பொங்கல் தினத்தையொட்டி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பொங்கல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி , வைத்தியர் யமுனானந்தா, வைத்தியர்கள் , தாதியர்கள் , நிர்வாக உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்டோர் பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டனர்















# ‘வடக்குக்கான உங்கள் நுழைவாயில்’ வர்த்தகக் கண்காட்சி 19 இல் ஆரம்பம்

2024 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் அதேவேளை அதனை மாற்றியமைக்கும் வருடாந்த நிகழ்வாக இந்தக் கண்காட்சி இடம்பெறுகின்றது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

“வடக்குக்கான உங்கள் நுழைவாயில்“ என்ற தொனிப்பொருளில் இந்த வர்த்தகக் கண்காட்சி இந்த முறை நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாம்பழ உற்பத்தி அதிகரிப்பு

கடந்த வருடத்தில் மாம்பழ உற்பத்தி பாரியளவில் அதிகரித்துள்ளது என்று விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் வரட்சியான காலநிலையைத் தொடர்ந்து பெய்த மழை காரணமாகவே மாம்பழ அறுவடை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் விவசாயம் குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடலின் போது, மா செய்கையை மேலும் அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது மா செய்கையை நடளாவிய ரீதியாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதேவேளை, மாம்பழ ஏற்றுமதியை மேலும் விஸ்தரிப்பது குறித்தும் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக வருடாந்த உற்பத்தி 25 கோடி எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் அந்த எண்ணிக்கையை விட தற்போது கணிசமான அளவு அதிகரித்துள்ளது என்று விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக தற்போது பல விசேட தரத் திலான உத்தியோகத்தர்களின் பதவி நிலையில் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோ கத்தர்கள் பணியாற்றும் நிலையில், எதிர் வரும் பெப்ரவரி 10ஆம் திகதியுடன் கிளி நொச்சி மாவட்ட அரச அதிபரும், மார்ச் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ள னர். விசேட தரத்திலான அந்த இரு உத்தி யோகத்தர்களின் இடத்திற்கு யாரை நியமிப்பது என்பதில் இழுபறி நிலை உள்ளது. இந்த இருவரின் ஓய்வுடன் தமிழ் அதிகாரிகள் பற்றாக்குறை மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று கருதப் படுகின்றது.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காணப்பட்ட வெற்றிடத்தின் அடிப்படையில் 2023 டிசம்பரில் விசேட தரத்திலான நிய மனம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் இந்த ஆண்டு ஜுன் மாதம் அளவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் அடுத்த நியமனப் பட்டியலில் முதல் 60 பேரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வர்களாகவே இருக்கின்றனர் எனத் தெரிகின்றது. அடுத்து சில இடங்களில் இருப்பவர்களின் நிலைமையும் கேள்விக் குறியாகவே உள்ளது.

இந்தப் பின்புலத்தில், கடந்த 4 ஆம் திகதி யாழ். வந்த ஜனாதிபதியிடம் ஒரு தரப்பு ஓர் வேண்டுகைக் கடிதம் வழங்கி யுள்ளது.

அதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்ட அரச அதிபர்களுக் கும் இந்த டிசம்பர் மாதம் வரையில் சேவை நீடிப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. இதற்கு தென்னிலங்கை அதிகாரிகள் இணங்குவார்களா என்பது சந்தேகமே.

இதேநேரம் அகில இலங்கை ரீதியி லான சேவையின் கீழ் பலருக்கு வந்த வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில் பலர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருக்கின் றனர்.

ஆனால், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்திற்கு எதிராக ஆட்சேபனை முறையீட்டை நாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த 7 ஆண்டுகளாக ஆணையாள ராகப் பணியாற்றும் ஜெயசீலன் தமக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்துக்குஎதிராக நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையில் முறையீடு செய்துள்ளார்.

தற்போதைய யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் ஜெயசீலனிற்கு கிளி நொச்சி மாவட்டம் பளைப் பிரதேச செயலா ளராக 2023-01-01 இல் இடமாற்றம் வழங்கப்பட்ட நிலையில் அப்போது மேன் முறையீடு செய்யப்பட்டது. இதனால் 2024-01-01 வரை அவர் ஆணையாள ராகத் தொடர அனுமதிக்கப்பட்டது.

எனினும் தொடர்ந்தும் அவர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஊடாக நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையில் முறையீடு செய்துவிட்டு ஆணை யாளராகப் பணியாற்றுகின்றார்.

இதேநேரம் யாழ். மாநகர சபையின் பிரதம கணக்காளர் திருமதி வசந்தமாலா விற்கும் கொழும்பிற்கு இடமாற்றம் வந்த நிலையில் அவரும் நிர்வாக மேன்முறை யீடுகள் நியாய சபையில் முறையீடு செய்துள்ளார்.

ஒருபுறம் அதிகாரிகள் பற்றாக்குறை. மறுபுறம் இருக்கும் அதிகாரிகள் பக்கத்தி லும் அவரவர் பக்க நியாயங்களுடன் பிரச்சினைகள். போதாக்குறைக்கு அரசி யல்வாதிகளின் விருப்பு, வெறுப்புக்கு ஏற்பதான அதிகாரிகள் நியமனங்கள் இடம்பெற வேண்டும். இவை எல்லாம் சேர இடியப்பச் சிக்கல் பிரச்சினைதான்.

# கைக்குண்டுடன் கைதான சந்தேகநபர்: ஏற்கனவே திருடிய பொருள்களும் மீட்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – இளவாலையில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டார். மேற்படி சந்தேகநப ரிடம் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் மேலும் ஒரு சந்தேகநபர் சான்றுப் பொருட்களுடன் கைது செய் யப்பட்டார்.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது,

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருட்டு வழக்குகளில் தலைமறைவாகி யிருந்த இளவாலை, நாதவோலை பகுதியைச் சேர்ந்த 37 வயதான நபரைக் கைது செய்யச் சென்றபோது சந்தேகநப ரிடம் இருந்து கைக்குண்டு மற்றும் கத்தி என்பன கைப்பற்றப்பட்டன.

அந்தச் சந்தேநபரைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்தனர்.

இதனடிப்படையில்திருடிய இலத்திரனி யல் மற்றும் சமையல் பொருட்களை சாவகச்சேரி பகுதியில் உள்ள ஒருவ ருக்கு விற்பனை செய்ததாக அவர் தெரி வித்தார்.

சந்தேகநபரிடம் இலத்திரனியல் உப கரணங்கள், சமையல் உபகரணங்க ளைக் கொள்வனவு செய்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞரையும் பொலி ஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதி மன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## கொழும்பில் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...) தெரிவித்துள்ளனர்.

42 வயதுடைய நபரே சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

## தேசிய நல்லிணக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஆரியகுளம் நாக விகாரையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில்,

"தற்போது நாட்டில் சுமுகமான நிலை காணப்படுகின்றது. தற்போதைய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் இக் கட்டான காலத்தில் நாட்டைப் பொறுப் பெடுத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குரிய வேலைத்திட்டங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளார்.

அதன் காரணமாக நாட்டில் தற்போது சுமுகமான நிலை காணப்படுகின்றது. எனினும், நாட்டில் மேலும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் மற்றும் மதங் களுக்கு இடையே நல்லிணக்கம் ஏற் படுமிடத்து நாட்டை மேலும் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்." – என்றார்.

யாழ்ப்பாணம் நாக விகாரையில் தேசிய நல்லிணக்க சபையின் அங்கத்த வர்களுக்கான நியமனச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று நீதி அமைச்சர் தலைமையில் நாக விகாரையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மும்மதத் தலைவர்களுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக் கப்பட்டன.

## மொட்டுவுக்கு இன்னமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

"அரசியல் ரீதியில் நாங்கள் குறிப்பி டும் கருத்துக்கள் திரிபுப்படுத்தப்படுகின் றன. எமது அரசு வரி குறைத்ததால் நெருக்கடிகள் தோற்றம் பெற்றன எனக் குறிப்பிடப்படுகின்றது.

தற்போது வரி அதிகரிப்பால் சமூகக் கட்டமைப்பில் நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பொருளாதார ரீதியில் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை அரசிடம் வலியுறுத் தியுள்ளோம்.

அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நிலையான இலக்கை அடைய முடியாது என்பதைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளோம்.

கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு நாங் கள் தயாராகவே உள்ளோம். பிரிந்து சென்றவர்கள் எம்முடன் தாராளமாக ஒன்றிணையலாம். அரசியலில் நான் யாரையும் எதிரியாகப் பார்க்கவில்லை." – என்றார்.

மஹிந்தவிடம் கேட்கப்பட்ட கேள்வி களுக்கு அவர் பதிலளிக்கையில்,

கேள்வி:- ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படுவதாகக் தெரிவிக்கப் படுகின்றதே?

பதில்:- அவர் ஐக்கிய தேசியக் கட்சி யின் ஜனாதிபதி வேட்பாளர்.

கேள்வி:- உங்களின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

பதில்:- நாங்கள் இதுவரை ஜனாதிபதி வேட்பாளரைத் தீர்மானிக்கவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்கலாம் அல்லது களமிறங்காமல் இருக்கலாம்.

# வற் அறவீட்டில் நிலவும் பிரச்சினைகள் குறித்த முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள நடவடிக்கை




வற் அறவீட்டில் நிலவும் பிரச்சினைகள் குறித்த முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உரிய முறையின்றி சிலர் வரி வசூலிக்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பிலான முறைப்பாடுகளை எழுத்து மூலம் சாட்சியங்களுடன் உபசைளுசைன.பழஎ.டம எனும் இணையத்தள முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

அத்துடன், ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி திணைக்களம், சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கடிதம் மூலம் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பெப்ரவரி 19ஆம் திகதிக்கு முன்னதாகவே பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்படும்


## கல்வி அமைச்சர் தகவல்



பாடசாலை மாணவர்களுக்குப் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னதாகவே பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 80 சதவீதமான பாடப்புத்தகங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாலைதீவின் விஷப்பரீட்சை

தனது அயலுறவுக் கொள்கைகள், அணுகுமுறைகள் காரணமாக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது இந்தியா.

அதன் இப்போதைய புதிய நெருக்கடி மாலைதீவு.

அந்நாட்டுக்குக் கொட்டிக் கொடுத்து உதவிய இந்தியா - வாரி இறைத்த பாரத தேசம் - இப்போது அதனிடம் பாடம் படிக்க வேண்டிய இக்கட்டுக்கு உள்ளாகி இருக்கின்றது.

மாலைதீவில் நிலை கொண்டு, அந்த நாட்டுக்கு பல்வேறு வகையிலும் உதவி வரும் இந்தியாவின் 88 இராணுவத்தினரையும் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் - மார்ச் 15 - இற்குள் இந்தியா விலக்கிக் கொள்ள வேண்டும் என்று காலக்கெடு விதித்திருக்கின்றார் மாலைதீவின் புதிய அதிபர் முகமது மூவிஸ்.

மாலைதீவுக்கு மருத்துவ உதவி மற்றும் கடல் கண்காணிப்புக்கான அதிநவீன இலகு ரக ஹெலிக்கொப்டர்கள், ட்ரானியர் இலகு ரக விமானம் போன்றவற்றை இந்தியா வழங்கியுள்ளது. அவற்றைப் பராமரித்து இயக்குவது உள்ளிட்ட பணிகளில் 88 இந்திய இராணுவத்தினர் அங்கு செயற்பட்டு வருகின்றனர். அவர்களை வெளியேற்றுமாறு மாலைதீவு இப்போது பணித்திருக்கின்றது.

1965இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற மாலைதீவுக்கு நெருங்கிய அயல்நாடு என்ற அடிப்படையில் கடந்த ஐம்பது வருடங்களாக பெருமளவு உதவிகளை வழங்கி வருகின்றது இந்தியா.

வெளிக் கூலிப்படையினரால் மாலைதீவு நாட்டின் இறையாண்மைக்கு விடுக்கப்பட்ட சவாலை, விரைந்து தன் படைகளை அனுப்பி, பரசூட்டுகள் மூலம் துருப்புகளைத் தரையிறக்கி காப்பாற்றியது இந்தியா.

ஆழிப் பேரலை தாக்கிய போதும், கொவிட் நெருக்கடி ஏற்பட்ட போதும், தனது சொந்த நாட்டை அவற்றிலிருந்து மீட்பதில் காட்டிய அதே துரிதத்தையும், ஈடுபாட்டையும் அயலானின் உடனடி உதவியாக மாலைதீவுக்கும் காட்டியது இந்தியா.

கொவிட்டால் பாதிப்புற்று நொடிந்த மாலைதீவின் உல்லாசப் பயணத்துறையைத் தூக்கி விடுவதற்காக முதலில் அந்த நாட்டுக்கு தனது உல்லாசப் பயணிகளை தடையை நீக்கித் திறந்து விட்டது இந்தியாதான். மாலைதீவுக்கு அதுகூடிய எண்ணிக்கையான உல்லாசப்பயணிகளைஇன்றுவரைஅனுப்பிவருவதும் பாரதம்தான்.

கடந்த ஐம்பது வருடங்களாக மாலைதீவு உள்ளகக் கட்டுமானங்களுக்குப் பெரும் உதவி அளித்து, உருக்கொடுத்ததே பாரத தேசம்தான்.

இதுவரை காலமும் 'இந்தியாவுக்கு முதலிடம்' என்பதே மாலைதீவு அரச நிர்வாகத்தின் கோட்பாடாக இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு இறுதியில் அங்கு நடந்த அதிபர் தேர்தலில் 'இந்தியா அவுட்!' என்று இந்தியாவை வெளியேற்றும் கோஷத்தை முன்னிறுத்திக் களத்தில் நின்ற சீன ஆதரவு வேட்பாளர் வெற்றியீட்டியமையை அடுத்து இன்று நிலைமை தலை கீழாக மாறத் தொடங்கிவிட்டது. இந்திய எதிர் நிலையை - எதிர்ப்பு நிலையை - வெளிப்படையாகவே மாலைதீவின் புதிய அதிபர் வெளிப்படுத்தி வருகின்றார். பதவியேற்ற கையோடு சீனாவுக்குப் பறந்த புதிய அதிபர் முகமது மூவிஸ் இந்தியாவுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுத்துக் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

மாலைதீவில் அடையாள எண்ணிக்கையில் இருக்கும் இந்தியப் படையினரை வெளியேற்ற அவர் காலக்கெடு விதித்தமை மட்டுமல்ல, இந்தியா - மாலைதீவு இடையே செய்து கொள்ளப்பட்ட சுமார் நூறு ஒப்பந்தங்களை மீள்பரிசீலனை செய்யப் போகின்றார் என்றும் அறிவித்திருக்கின்றார்.

1989இல் இலங்கையில் நிலை கொண்டிருந்த சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான இந்திய அமைதிப்படையினரை வெளியேறும்படி அப்போதைய இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பகிரங்கமாகக் கோரினார். அது தமது நாட்டின் தனித்துவ சுயாதிபத்தியம், இறையாண்மை ஆகியவற்றை நிலைநாட்டி, சொந்தக் காலில் நிற்பதற்கான துணிச்சலான அறிவிப்பாகப் பார்க்கப்பட்டது.

ஆனால் 88 பேர் மட்டுமே கொண்ட இந்தியாவின் சிறிய இராணுவ அணியை இன்று மாலைதீவில் இருந்து வெளியேறுமாறு அந்த நாட்டின் புதிய அதிபர் அறிவித்திருக்கின்றமை அந்த நாட்டின் இறையாண்மையை தனித்துவமாகத் தக்க வைத்து, நிலைநாட்டவல்ல. மாறாக, இந்தியாவுக்குப்பகைநாடானசீனாவுக்குஅங்கு கால் பதிக்க இடம் அளிப்பதற்காக. வெற்றிலை வைப்பதற்காக.

இந்து சமுத்திரத்தில் இலங்கையைப் போல மாலைதீவும் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஸ்தானமாகும். அங்கு நிலையூன்றுவது என்பது இந்து சமுத்திரத்தின் மீதான ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நடவடிக்கை போன்றது.

அயல் தேசத்திற்கு எதிராக அந்நிய தேசத்தைக் காலூன்ற இடமளிக்கும் மாலைதீவின் விஷப் பரீட்சை இந்தப் பிராந்தியத்துக்கே - இந்து சமுத்திரக் கடலோர நாடுகளுக்கே - ஆபத்தான விளைவுகளை தரக் கூடியது.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி: 17 காளைகளை அடக்கிய இளைஞன்

## - பொலிஸார் உட்பட 51 பேருக்கு காயம்



மதுரை அவனியாபுரம் ஜல்லிகட்டு போட்டி விறுவிறுப்பாக இடம்பெற்றுள்ளது. 17 காளைகளை அடக்கி முதலிடம் பிடித்த அவனியாபுரத்தைச் சேர்ந்த மாடுபிடி வீரர் கார்த்திக் என்பவருக்கு 10 லட்சம் மதிப்பிலான கார் மற்றும் கறவை பசு பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், சிறந்த காளைக்கும் கார் மற்றும் கறவை பரிசாக வழங்கப்பட்டன. இந்தப்போட்டியில் 2 பொலிஸார் உள்பட 51 பேர் காயமடைந்தனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நேற்று காலை 7 மணிக்கு மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்புக்கு பின் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் மதுபாலன் ஆகியோர் போட்டியினை கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இதனையடுத்து இந்த போட்டியில் கலந்துகொள்வதற்காக ஆன்லைன் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 435 மாடுபிடி வீரர்களும் 10 சுற்றுகளாக அனுமதிக்கப்பட்டதோடு 817 காளைகளும் அவிழ்க்கப்பட்டன.

9 சுற்றுகளிலும் இருந்து குறைந்தது 5 காளைகளை அடக்கிய சிறந்த மாடுபிடி வீரர்கள் தேர்வுசெய்யப்பட்டு இறுதி சுற்றில் கலந்துகொண்டனர். விதவிதமான பெயர்களில் அவிழ்க்கப்பட்ட காளைகள் வீரர்களுக்கு சவால் விடுக்கும் வகையில் களத்தில் நின்று விளையாடி வீரர்களை மிரட்டி வெற்றிபெற்று பரிசுகளை அள்ளி சென்றன.

இதேபோன்று களத்தில் மிரட்டிய காளைகளை மாடுபிடி வீரர்களும் சீறிப்பாய்ந்து அடக்கி பல்வேறு பரிசுகளை பெற்றுச்சென்றுள்ளனர்.

இப்போட்டியில் திறமையாக விளையாடி 17 காளைகளை அடக்கிய மதுரை அவனியாபுரம் பகுதியை சேர்ந்த கார்த்திக் என்ற இளைஞருக்கு முதல் பரிசாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் கார் மற்றும் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி சார்பில் கன்றுடன் கூடிய கறவை பசுவும் பரிசாக வழங்கப்பட்டன.

இதேபோல போட்டியில் சிறப்பாக விளையாடிய சிறந்த காளைக்கான பரிசை அவனியாபுரம் பகுதியை சேர்ந்த தமிழ்நாடு ஜல்லிக்கட்டு இளைஞர் பேரவையின் மறைந்த தலைவர் ஜி.ஆர். கார்த்திக் பெயரில் அவிழ்க்கப்பட்ட காளைக்கு முதல் பரிசாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் காரும், மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி சார்பில் கன்றுடன் கூடிய கறவை பசுவும் வழங்கப்பட்டது.

இந்த போட்டியில் மாடு முட்டியதில் 2 பொலிஸார் உட்பட மாடுபிடி வீரர்கள், பார்வையாளர்கள், காளை உரிமையாளர்கள், உள்ளிட்ட 51 பேர் காயமடைந்துள்ளனர். 10 பேர் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# சபரிமலையில் மகரஜோதி தரிசனம்: பக்தி பரவசத்தில் மூழ்கினர் பக்தர்கள்



கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் அமைந்துள்ளது ஐயப்பன் திருக்கோயில். மகரவிளக்கு பூஜைக்காக கடந்த டிசம்பர் 30 ஆம் திகதி நடைதிறக்கப்பட்டது. தை மாதம் முதல் திகதியான நேற்று மாலை 6.48 மணி அளவில் பொன்னம்பல மேட்டில் ஜோதி வடிவில் சுவாமி ஐயப்பன் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

அந்த காட்சியை காண சபரிமலையில் லட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். ஜோதி காட்சி அளித்ததும் பக்தர்கள் 'சுவாமியே சரணம் ஐயப்பா' என சரணம் கோஷமிட்டு பக்தி பரவசத்தில் மூழ்கினர்.

மகரஜோதியைக் காண கேரளா, தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வந்திருந்தனர்.

சுவாமி ஐயப்பன் ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்காக காட்சி அளித்தார். அதற்கான திருவாபரணம் பாரம்பரிய முறைப்படி கொண்டு வரப்பட்டது. தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை கேரள மாநில பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

மகரஜோதியைக் காண பக்தர்களின் வசதிக்காக சன்னிதானத்தின் திருமுற்றம், பாண்டித்தாவளம், கொப்பரைக்களம், மாளிகைபுரம், அப்பாச்சிமேடு, அன்னதான மண்டபம் உள்ளிட்ட 10 இடங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பக்தர்கள் மகரவிளக்கு பூஜைக்காக பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

# புதிய ரக ஏவுகணையை பரிசோதித்தது வடகொரியா



வடகொரியா நேற்று மேலும் ஒரு புதிய ரக ஏவுகணையினை பரிசோதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டதூர ஏவுகணை தாக்குதலை கண்டறிந்து மற்றும் இடைமறித்து அழிப்பது தற்போது கடினமான நிலையில் உள்ளதனால், புதிய தொழில்நுட்பத்துடனான ஹைப்பர்சொனிக் ரக ஏவுகணையே பரிசோதிக்கப்பட்டதாக வடகொரியா அறிவித்துள்ளது.

இந்த ரக ஆயுத பரிசோதனைகளை அமெரிக்கா, சீனா, ரஷ்யா மற்றும் சில நாடுகளின் விஞ்ஞானிகளும் முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக இந்த ரக ஏவுகணைகள் யுத்த கப்பலில் இருந்து ஏவப்படும் போது அவை ஒலியை விட ஐந்து மடங்கு வேகத்தில் அல்லது மணிக்கு 6,200 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் வல்லமையை கொண்டுள்ளன.

இவை குறிப்பிட்ட இலக்கை சென்றடைவதற்கு முன்னர், அதனை அழிக்கும் தொழில்நுட்பம் குறித்தே நாடுகள் கவனம் செலுத்துகின்றன.

இந்த வகையிலான ஏவுகணைகளை வடகொரியா கடந்த 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிலும் சோதனைக்கு உட்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 100 நாள்களைக் கடந்தும் தொடரும் போர்: பாலஸ்தீனர்களின் பலி எண்ணிக்கை அதிகரிப்பு

இஸ்ரேல் இராணுவத்திற்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையில் போர் மூண்டு கடந்த சனிக்கிழமையுடன் 100 நாள்கள் கடந்து விட்டன.

இந்த போரில் பலியான பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 24 ஆயிரத்தைக் கடந்துவிட்டதாக காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 100 நாள்கள் கடந்தும் ஹமாஸ் படையினரால் பணயக்கைதிகளாக கொண்டு செல்லப்பட்டவர்களில் பலரது நிலை குறித்து இதுவரை தகவல் கிடைக்காததால், அவர்களின் உறவினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தி, தரை, கடல் மற்றும் வான் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் படையினர், சுமார் 1200 பேரை படுகொலை செய்தனர். மேலும், 250 பேரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.



இதனால், ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்து விடுவதாக சூளுரைத்த இஸ்ரேல், காஸா பகுதியை முற்றுகையிட்டு அங்கு வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது.

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 24,000 ஐ கடந்துவிட்டது.

இஸ்ரேலின் குண்டுவீச்சில் இதுவரை 60 ஆயிரத்து 582 போர் காயமடைந்துள்ளனர் என காஸாவின் சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.



# இலங்கைக்குக் கடத்த முற்பட்ட கஞ்சா தமிழகத்தில் சிக்கியது

## பீடி இலைகளும் மீட்பு

(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 140 கிலோகிராம் கஞ்சா மற்றும் 2 ஆயிரத்து 500 கிலோகிராம் பீடி இலைகள் என்பன நேற்று தமிழகத்தில் சிக்கின.

இலங்கையின் மன்னாருக்குக் கடத்தி வரும் நோக்கில் ஒரு காரில் 140 கிலோகிராம் கஞ்சா கொண்டு வரப்படுகின்றது எனக் கிடைத்த தகவலின் பெயரில் காரைச் சோதனையிட்ட தமிழகப் பொலிஸார் அதில் மறைத்து வைத்திருந்த 140 கிலோகிராம் கஞ்சாவை மீட்டனர்.

அதை எடுத்து வந்த ஐவரைக் கைது செய்ய முற்பட்ட சமயம் இருவர் தப்பியோடியுள்ளனர். பின்னர் மேற்கொண்ட தேடுதலில் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.



பட்டா ரக வாகனத்தில் கடற்கரை நோக்கி எடுத்து வந்த 2 ஆயிரத்து 500 கிலோ பீடி இலைகளையும் தமிழகப் பொலிஸார் கைப்பற்றினர்.

# போதை மாத்திரை, கஞ்சாவுடன் கஹவத்தையில் ஒருவர் கைது!



பாடசாலை மாணவர்களையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து தயாரிக்கப்பட்ட கஞ்சா கலந்த போதை மாத்திரைகளுடன் ஆயுள் வேத வைத்தியரின் அடையாள அட்டையுடன் சந்தேகநபர் ஒருவர் பஸ் சோதனையின் போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று கஹவத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியான 2 ஆயிரத்து 500 போதை மாத்திரைகளும், 220 கிராம் கஞ்சாவும் சந்தேகநபரிடமிருந்து கதிர்காமம் – குருநாகல் தனியார் பஸ்ஸில் வைத்து கஹவத்த – வெல்லதுற பிரதான வீதியில் இடம்பெற்ற திடீர் சோதனையின் போதுகைப்பற்றப்பட்டுள்ளதுடன்சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கஹவத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இ.தொ.கா. கூட்டணியில் வடிவேல் சுரேஷ் சங்கமமா?

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக நாடாளுமன்றம் தெரிவாகி தற்போது அரசுக்கு ஆதரவளித்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் கூட்டணி அமைக்கத் தயாராகி வருகின்றார் என்று சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து இது தொடர்பில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளருமான வடிவேல் சுரேஸிடம் எமது வினவியபோது, அவ்வாறான பேச்சுகள் நடத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டு, குறித்த செய்தியை நிராகரித்துள்ளார்.



# கொழும்பு, மன்னார், யாழில் காற்று மாசுபாடு அதிகரிப்பு

நாட்டின் பல பகுதிகளில் காற்றில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் வளி மாசுபாட்டு தரக்குறியீடு கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் பத்தரமுல்லை மற்றும் கோட்டையை அண்மித்த பகுதிகளில் வளி மாசுபாட்டு தரக் குறியீடு 105 புள்ளிகளாகவும், யாழ்ப்பாணத்தில் 100 புள்ளிகளாகவும் அதிகரித்துள்ளது.



# கட்சி தாவும் அரசியலுக்கு பொன்சேகா கடும் எதிர்ப்பு

ஆளுங்கட்சிப் பக்கம் இருந்து எதிரணிப் பக்கம் தாவும் அரசியல்வாதிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் தஞ்சம் வழங்கி வருவது தொடர்பில் அக்கட்சியின் தவிசாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அடுத்த தேர்தலை இலக்குவைத்து வரும் அனைவரையும் ஏற்றுக்கொள்வது ஏற்புடைய நடவடிக்கை அல்ல எனவும், இதனால் ஐக்கிய மக்கள் சக்தி மீதும் மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் எனவும் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

“ஐக்கிய மக்கள் சக்திதான் தற்போது மாற்று சக்தியாகும். எனவே, எமது கட்சியில் இணைபவர்களின் கடந்தகாலம் பற்றி மக்கள் விழிப்பாகவே இருக்கின்றனர். எனவே, எமது கட்சி பக்கம் வருபவர்கள் தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் அரசியல் தலைவிதியை மாற்றி அமைப்பார்கள்.” – எனவும் பொன்சேகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# உயர்தரப் பரீட்சை வினாத்தாள் கசிவு: மற்றுமொரு சந்தேகநபர் நேற்று கைது

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விவசாயப் பாடத்தின் இரண்டாம் வினாத்தாள் கடந்த வெள்ளிக்கிழமை சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் முன்னர் கைது செய்யப்பட்ட ஆசிரியருக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக வினாத்தாள்களை அனுப்பியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பரீட்சை நிலையமொன்றில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் ஒருவர் முன்னதாகவே கைது செய்யப்பட்ட நிலையில் அவர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# பெப்ரவரி 19ஆம் திகதிக்கு முன்னதாகவே பாடப்புத்தகங்கள், சீருடைகள் வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் தகவல்

பாடசாலை மாணவர்களுக்குப் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னதாகவே பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 80 சதவீதமான பாடப் புத்தகங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பௌத்த தர்மத்தை அவதூறு செய்த மஹிந்த கொடித்துவக்கு சி.ஐ.டியால் நேற்று கைது



அவலோகிதேஷ்வர எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட மஹிந்த கொடித்துவக்கு என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழுவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

பன்னிப்பிட்டிய பகுதியில் நேற்று பகல் கைது செய்யப்பட்ட மஹிந்த கொடித்துவக்கு பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த நபர் தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் பௌத்த பிக்குகளிடம் இருந்தும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த கொடித்துவக்கு பௌத்த தர்மத்திற்கு அவதூறு ஏற்படுத்தினார் என முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# வல்வெட்டித்துறை ஆகாய வெளியில் அலங்கரித்த விசித்திரமான பட்டங்கள்






தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினத்தையொட்டி மாபெரும் பட்டப் போட்டி நேற்று யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் நடைபெற்றது. வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பலவிதமான வண்ணங்களில் விசித்திரமான பட்டங்கள் வானில் பறக்க விடப்பட்டன. மேற்படி போட்டியில் ஆகாய விமானம் தாங்கிய போர் விமானம் என்ற பட்டம் முதலாம் இடத்தையும், விண்வெளியில் நிலை நிறுத்திய செயற்கைக் கோள் என்ற பட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.








# வல்வெட்டித்துறை ஆகாய வெளியில் அலங்கரித்த விசித்திரமான பட்டங்கள்















# வல்வெட்டித்துறை ஆகாய வெளியில் அலங்கரித்த விசித்திரமான பட்டங்கள்



# இன்றைய ராசி பலன்கள் - 16.01.2024

## மேஷம்

நீங்கள் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். வீடு கட்டுதல், புனரமைத்தல் போன்ற பொறுப்புகள் காரணமாக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.

சக பணியாளர்களுடன் விருப்பங்களில் வேறுபாடு காணப்படும். நீங்கள் அதிகப்படியான பணிகள் இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வது நல்லது. இது உறவை பலப்படுத்தும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

## ரிஷபம்

இன்று நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். இன்று எடுக்கும் பயனுள்ள முடிவுகள் உங்களுக்குச் சாதகமான பலன்களை பெற்றுத் தரும்.

பணியில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் உங்கள் பணிகளை உற்சாகமாகவும் எளிதாகவும் மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று இனிமையாக நேரம் கழிப்பீர்கள். உங்கள் துணையுடன் நல்ல உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் கடின உழைபிற்காக ஊக்கத் தொகை பெறுவீர்கள். இதனால் திருப்தி நிலவும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று உங்களுக்கு சிறப்பான நாள். புத்திசாலித்தனமான போக்கு உங்கள் செயல்களில் வெற்றியை பெற்றுத் தரும். சுதந்திரமான கண்ணோட்டத்தை பராமரிப்பதன் காரணமாக நீங்கள் உகந்த முடிவை எடுப்பீர்கள்.

உங்களுக்கு கூடுதல் பணிகள் வழங்கப்படும். அதில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வீர்கள்.

இன்று காதல் விவகாரங்கள் சிறப்பாக இருக்காது. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இதனை தவிர்க்க இருவரும் கலந்து பேசிக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

பிரச்சினைகளை தவிர்ப்பதற்கு நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வதந்திகளை தவிர்க்கவும். இன்று யதார்த்த அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் காண நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். அதிர்ஷ்டத்தை நம்பியிராமல் உங்கள் முயரசிகளில் நம்பிக்கை வையுங்கள். இதன் மூலம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

தேவையற்ற வாக்குவாதம் காரணமாக இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

சம்பாதித்த பணத்தில் பெரும்பான்மையை உங்கள் குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருப்பதால் சேமிக்கும் வாய்ப்பு குறைவு.

## சிம்மம்

இன்று உங்களின் தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சற்று மந்தமான நாளாக இருக்கும். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணியில் சீரான பண்கள் காண நீங்கள் இதனை தவிர்க்க வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். தவறான புரிந்துணர்வை தவிர்க்கவும்.

நீங்கள் பணத்தை சரியாக கையாள வில்லையெனில் பணம் இழக்க வாய்ப்புள்ளது. இந்த நிலையை சமாளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றுஅதிக பணிகள் காரணமாக பதட்டமும் அதன் காரணமாக கால் வலியும் காணப்படும்.

## கன்னி

இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி அதில் வெற்றியடைவீர்கள் . நீங்கள் சாதிக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். அதற்காக உங்களை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி காண்பீர்கள். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். உங்கள் தகவல் தொடர்பு திறமை மூலம் நீங்கள் பணியில் சாதிப்பீர்கள்.

நீங்கள் இன்று காதலின் இனிமையை உணர்வீர்கள். இன்று உங்கள் காதலை வெளிபடுத்த உகந்த நாள்.

இன்று நிதிநிலையில் எந்தப் பிரச்சினயும் இருக்காது. நீங்கள் பணத்தை சிறப்பாக திறமையுடன் கையாள்வீர்கள்.

இன்று நீங்கள் உணர்ச்சி வசப்பட நேரலாம். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

## துலாம்

இன்று சிறந்த பலன்கள் கிடைக்கும் நாள். ஆரம்பத்தில் சில தடைகள் இருந்தாலும் முடிவில் சாதகமான பலனைப் பெறுவீர்கள்.

இன்று பணியிடத்தில் நீங்கள் சில மாற்றங்களை சந்திக்க நேரலாம். மாறுபடும் சூழ்நிலைகளுக்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இன்று பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

காதலைப் பொறுத்தவரையில் இன்று முக்கிய முடிவுகள் கண்டிப்பாக எடுக்க வேண்டாம்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். வரவு செலவு என்று ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் பொதுவான இலக்குகள் நோக்கி செயல்படுவீர்கள். இந்த முயற்சியில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் அறிவார்ந்த முறையில் பணி செய்து பணியில் வெற்றி பெறுவீர்கள். இதனால் நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் சம்பந்தமான முக்கிய முடிவுகளை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படாது. இன்று கூடுதல் சுமைகள் காணப்படும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடற்பயிற்சி மூலம் நீங்கள் இதனை தவிர்க்கலாம். இன்று இது மிகவும் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 16.01.2024

## தனுசு

சில ஆரம்ப கால தடைகளுக்குப் பின் உங்கள் இலக்குகளை பூர்த்தி செய்வீர்கள். இதற்கு சில கூடுதல் முயற்சி தேவைப்படும். இன்றைய நாளின் முடிவில் வெற்றி காண்பீர்கள்.

இடைவிடாத தொடர் முயற்சி மூலம் நீங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை கவனமுடன் மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் காதலை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். காதல் சம்பந்தமான சுப நிகழ்சிகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது.

உங்கள் வீட்டை புனரமைக்க இன்று நீங்கள் பணம் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## கும்பம்

இன்று நீங்கள் அனுகூலமான முடிவுகள் எடுக்க மனதில் தெளிவுடன் இருக்க வேண்டும். இன்று நெருங்கியவர்களுடன் உரையாடுவதில் கூட உங்களிடம் தயக்கம் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படாது. பணி நிமித்தமான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் தேவையில்லாத வாக்குவாதங்கள் ஏற்படும். உங்கள் காதலை உங்கள் தந்தை எற்றுக் கொள்ள மாட்டார்.

நிதி நிலையைப் பொறுத்தவரை இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

## மகரம்

இன்று நீங்கள் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் ஆற்றலை நன்கு உணர்ந்து செயல்படுவீர்கள். உங்கள் தகவல் தொடர்பு திறமையால் நீங்கள் புகழடைவீர்கள்.

உங்கள் திறமை மூலம் நீங்கள் பணியில் வெற்றி காண்பீர்கள். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி இன்று உங்களிடம் காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் செயல்களின் மூலம் உங்கள் துணையை திருப்திபடுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று போதிய அளவு பணம் காணப்படும்.

உங்களின் அனுசரணையான மன நிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

நீங்கள் செய்யும் செயல்களில் திருப்தி கிடைக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இதன் மூலம் பாதுகாப்பின்மை உணர்வை நீங்கள் சமாளிக்கலாம்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளால் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள். இதனால் சிறிது வருத்தம் காணப்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

மனக் குழப்பம் காரணமாக காதல் விஷயத்தில் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். சூடான வாக்குவாதங்களில் ஈடுபடுவீர்கள். இது உறவின் இனிமையைக் கெடுக்கும்.

இன்று இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

ஆரோக்கியமான உணவை சரியான நேரத்தில் உண்ணவும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies | Kelsey Homes 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park